Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர்-19 இதழ்-6 ஜூன் - 2006




## கிறிஸ்துவின் சபை

**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.**

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

## உங்கள் கவனத்திற்கு ...

*கடந்த 1994 ஆம் ஆண்டு துவங்கி,*
*காங்கயத்தில் நடைபெற்று வரும்*
**"எக்லீசியா வேதாகமக் கல்லூரி"** *யின்*
**மூன்று வருட பட்டப்படிப்பிற்கு**
*தகுதியுள்ள மணமான, மணமாகாத ஆண்கள்*
*மற்றும் / வாலிபரிடமிருந்து விண்ணப்பங்கள்*
*உடனடியாக வரவேற்கப்படுகின்றன.*

★ விவரம் 9ம் பக்கம் பார்க்கவும் ★

## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. விக்கிர ஆராதனை என்னும் பாவம் ........ 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 17
5. சிறுவர் பகுதி ........ 21
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 22
7. கிறிஸ்து தரும் சமாதானம் ........ 26
8. வேதாகமம் மட்டும் போதுமா ? ........ 29

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 19** **JUNE - 2006** **Issue - 6**


ஆசிரியர் உரை

## கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ?

நாம் ஒவ்வொருவரும், நம்முடைய பேச்சு வழக்கில் நம்முடைய எண்ணங்களையும், எதிர்பார்க்குதல்களையும், ஏமாற்றங்களையும் வெளிப் படுத்தப் பல முறைகளை பயன்படுத்துகிறோம். உலகில் பேசப்படும் எல்லா மொழிகளிலும் இதற்கெனப் பிரத்தியேக வாக்கிய அமைப்புகள் உண்டு. தொன்மைக்கும், சிறப்புக்கும் பெயர்போன நமது தாய்மொழியாம் தமிழ் மொழியும் இதற்கு விதிவிலக்கானதல்ல. ஒருவரைப் பார்த்து **ஒன்று இல்லையா**" என்பதற்கு எப்படிப் பொருள் உள்ளதோ அதுபோல், **ஒன்று இல்லையோ** என்பதற்கும் பொருள் உண்டு. சொல்லப்போனால், இரண்டு பொருளுக்கும் அதன் தன்மையில் பெரிய வேறுபாடும் உண்டு. முதலாவது, ஒன்று இருக்கிறதா அல்லது இல்லையா என்ற சந்தேகத்தின்டிப் படையில் கேட்கப்படுவது, இரண்டாவதோ, ஒன்று இருக்கிறதென்று திட்டமாக தெரிந்த நிலையில் கேட்கப்படுவது. இன்னும் சரியாகச் சொல்வதானால், ஒன்று தான் இருக்கிறதே, பின்னே ஏன் இப்படி என்று எடுத்துரைப்பதற்காகவும், இடித்துரைப்பதற்காகவும் கேட்கப்படுவது. இம்மாதத்திற்கான நம்முடைய தலைப்பும் கூட, இந்த ரகத்தைச் சேர்ந்தது தான். ஆம்! தங்களுடைய கீழ்ப்படியாமையினிமித்தம் பாபிலோனுக்கு அடிமைகளாகக் கொண்டு செல்லப்படும் யூத ஜனம், ஒரு கட்டத்தில், இப்படியாகக் கேட்பார்கள் என்று புலம்பல் தீர்க்கனாகிய எரேமியா, ஆவியின் ஏவுதலால் கண்டு இப்படி எழுதியுள்ளார். **கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ?**" இரண

**வைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற் போனாள்?** என்று (எரேமியா 8:22).

சரி, "கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ?" என்ற தலைப்பின் கீழான பாடத்தைக் கற்றுக்கொள்வதற்கு முன், ஆசானின் ஆச்சாரப்படி, இப்பகுதியின் பின்னனி குறித்துப் பார்த்து விடலாமா?.

இல்க்கியாவின் குமாரனான எரேமியா தீர்க்கதரிசன ஊழியத்தை ஆரம்பித்தபோது, யோசியா ராஜாவாக இருந்தான். யூதாவை ஆண்ட மிக நல்ல ராஜாக்களில் இவனும் ஒருவன். இவன் தன் நாட்களில், தடம்புரண்டு போயிருந்த் யூதர்களின் பக்தி மார்க்கத்தைச் சீரமைக்கப் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டான். ஆம், ஆள் அரவமற்ற நிலையில் கேட்பாரற்றுக் கிடந்த தேவாலயத்தைப் புனரமைத்தான். தொலைந்துபோன நியாயப் பிரமாணப் புத்தகங்களைக் கடும் பிரயாசை எடுத்துக் கண்டுபிடித்தான். புரையோடிப் போயிருந்த விக்கிரக வணக்கத்துக்குப் பாடை கட்டி, தேசத்தை விட்டு அப்புறப்படுத்தினான். அத்தோடு மெய்பக்தி மார்க்கத்திற்கான அடித்தள மிட்டு அதை நடைமுறைப்படுத்தினான்.

ஆனால், இந்த நல்ல ராஜாவாகிய யோசியா, ஒரு சமயம் எகிப்தியர்களோடும், பார்வோன் நேகோவோடும் நடந்த யுத்தத்தில் சாகத்தக்க அளவு காயமடைந்தான். (2 ராஜா. 23:29,30) பிறகு, இவனைத் தொடர்ந்து இராஜாவானவர்களும், பார்வோனின் தயவால் ராஜாவாக்கப் பட்ட யோயாக்கீம் போன்றவர்களும், பக்தி நிலையில் பாதாளத்துக்குச் சென்றதோடு, ஜனங்களும் அதல பாதாளம் செல்லப் பாதை அமைத்துக் கொடுத்தனர். இக்கால கட்டத்தில், யூதாவின் ஜனங்கள், பாவ வாழ்க்கைக்கான ஒரு புதிய பரிமாணத்தையே பெற்றுக் கொண்டார்கள். நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் எட்டாம் அதிகாரத்திற்கான பின்னணி இதுதான்.

இந்த எட்டாம் அதிகாரத்தை நாம் மேலும் கவனித்தால், அப்பொழுதிருந்த ஜனங்களின் யதார்த்த நிலைபற்றி, தீர்க்கன் எப்படி எடுத்துரைக்கிறார் என்பதையும் தெரிந்து கொள்ள முடியும். (1) கபடத்தை உறுதியாய்ப் பிடித்துக் கொண்டிருக்கும் ஜனம் (வசனம்-5). (2) பொல்லாப் பினிமித்தம் மனஸ்தாபம் இல்லை (வ-7). (3) வேதபாரகரின் கள்ள எழுத்தாணி (வ-8) (4) கர்த்தருடைய சொல்லை வெறுத்தார்கள் (வ-9). (5) ஜனங்களும், ஆசாரிய்ர்களும் பொய்யர் (வ-10). (6) சமாதானமில்லா திருந்தும் சமாதானம், சமாதானம் என்று சொல்லும் மாய்மாலம் (வ.11). (7) இவைகளினிமித்தம் அவர்களை அழித்துப்போடுவேன் என்ற தேவ எச்சரிப்பு (வ-13) என்று இப்படியாகச் சொல்லிவரும் எரேமியாதான், வசனம் 18 தொடங்கி கொஞ்சம் வித்தியாசமாகப் பேசியிருக்கிறார்.

ஆம், இப்பகுதியில், யெகோவாவுக்கு கீழ்ப்படியாத ஜனம், பாபிலோனுக்கு அடிமைகளாகக் கொண்டு போகப்படுவார்கள் என்று மாத்திரம் எரேமியா ஆவியின் ஏவுதலால் காணாமல், கொண்டு செல்லப்பட்ட இடத்திலிருந்து அவர்கள் எப்படிக் கூப்பாடு போடுவார்கள் என்றும் கூறுகிறார். **அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை..... கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரண வைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற் போனாள்?** (எரேமியா. 8:20-22).

இங்கே சொல்லப்பட்டிருக்கும் கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? என்பதை அடிப்படையாக வைத்துத்தான் சில பாடங்களைக் கற்றுக்கொள்ள இருக்கிறோம். அதற்கு முன்பாக, கீலேயாத் பற்றியும், அங்கே கிடைக்கும் பிசின் தைலத்தின் சிறப்பு பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

முதலாவது, கீலேயாத் என்ற வார்த்தையின் பொருள் “பாறை போன்றது” அல்லது “உறுதியானது” என்பது. இது, யூதாவிலிருந்த ஒருமலை (நியா 7:3) புகழ்மிக்க எலியா தீர்க்கன் பிறந்த மண் (1இராஜா 17:1). சிறப்புக்கள் பலவற்றிற்குச் சொந்தமான இந்த கீலேயாத், அங்கே கிடைக்கும் பிசின் தைலத்தினிமித்தம் மேலும் சிறப்பு பெற்றிருந்தது. இங்கே கிடைத்த பிசின் தைலமானது, முன் காலத்தில், இஸ்மவேலர்களால் எகிப்து தேசத்திற்கும் (ஆதி 37:23), பின்னாட்களில் யூதர்களால், தீரு போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது (எசே 27:17). பெலஸ்தீனா தேசத்தில் தயாரிக்கப்பட்ட விலைமதிப்புள்ள பொருள்களில் இந்தத் தைலமும் ஒன்று (ஆதி 43 : 11) இதற்குப் பல காரணங்கள் உண்டு. அவைகளில் பிரதான மானது, இதற்கிருக்கும் மருத்துவ குணம். குறிப்பாக காயங்கள் கட்டப் படுவதற்கு இது பயன்பட்டுள்ளது. இப்படிப்பட்ட தைலத்தைத்தான் எரேமியா தீர்க்கன் ஆவிக்குரிய ரீதியில் பாவத்தின் வஞ்சனையால் காயப்பட்டு, கட்டப்பட வேண்டிய நிலையிருந்த யூதர்களுக்கு உருவகமாகப் பயன்படுத்தி யுள்ளார். காயம் ஆறாமல், முற்றிப்போன நிலையில்தான் விடுதலை பெற விரும்பி “கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ” என்று கூக்குரலிடப்பட்டுள்ளது.

இப்பொழுது இதிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்களைப் பார்ப்போம்.

## I <u>பாவம் என்னும் வியாதி</u>

“கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ” என்பதிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல்பாடம், பிரச்சினைக்கு எப்பொழுதுமே அடிப்படை பாவம் தான் என்பது.

ஆம், அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி, மனித வாழ்வில் காணப்படும் அநேக பிரச்சினைகளுக்குக் காரணமாகப் பாவம் இருந்து வந்துள்ளது. ஆன்மச் சீரழிவுக்கான காரணமாக மாத்திரமல்லாமல், சரீர வாழ்வின் கேட்டுக்குக் காரணமாகவும் பாவம் இருந்து வருகிறது. அன்றைய நாட்களில், யூதாவின் ஜனங்களுக்கு ஏற்பட்ட கசப்பான காரியங்களுக்கு, குறிப்பாக, அந்நிய நாட்டிலே அடிமைகளாகக் காலம் தள்ள நேர்ந்ததற்குக் காரணம் பாவமே.

எந்த ஒரு பாவமும் செயல்வடிவம் பெறுவதற்கு முன்னதாக, அது சிந்தனையிலே தான் ஆரம்பமாகிறது. இதைப் பற்றி ஞானி சாலமோனைக் கொண்டு ஆவியானவர் கூறும்போது, "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்" என்கிறார். (நீதி 23:7) ஆகவேதான், அதே நீதிமொழிகளில் "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்றுப் புறப்படும்" (நீதி. 4:23) என்று கூறியுள்ளார். இந்த யூதாவின் ஜனங்கள் எண்ணத்திலே கேடடைந்தவர்களாக முதலில் மாறி, பிறகுதான் பாவச் செயலுக்குத் தங்களை உட்படுத்தியுள்ளனர். எசேக்கியேல் தீர்க்கன் அவர்களைப் பற்றி, "அவர்கள் கடின முகமும் முரட்டாட்ட இருதயமுமுள்ள புத்திரர்" என்று கூறியுள்ளார் (எசே 2:4) இப்படிப்பட்ட இருதயத்தின் விளைவைக் குறித்து எரேமியா தீர்க்கன் சொல்லும் போது, "அவர்களோ கேளாமலும், தங்கள் செவிகளைச் சாய்க்காமலும் போய்க்கேளாதபடிக்கும் புத்தியை ஏற்றுக் கொள்ளாத படிக்கும், தங்கள் கழுத்தை கடினப்படுத்தினார்கள்" (எரே 17:23).

இப்படி இருதயக் கடினத்தினாலே தோற்றம் பெறுகின்ற பாவம் அதே நிலையில் எப்போதும் அங்கேயே குடியிருப்பதில்லை. ஒரு கட்டத்தில் அது தன்னை வெளிப்படுத்தி செயல்பட ஆரம்பிக்கிறது. ஆம், **யூதர்களின் இருதயக் கடினம் அவர்களை விக்கிரகங்களின் பின்னால் போகச் செய்தது (எசே 6:9) பாவம் அவர்களை தேவனை விட்டுப் பிரிந்து போகும்படி செய்தது. இருதயக்கடினம் தேவனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பூர்வ பாதையை மறக்கும் படியாகச் செய்தது** (எரே 6:16) இப்படியாக, இருதயக்கடினமும், அது ஈந்து தந்த பாவமும் ஒரு தொற்று நோயாக மாறி, எல்லோரையும் பாதித்து, ஒரு தேசமே தேவனை விட்டு வழி விலகிப் போகும்படி செய்தது.

அருமையானவர்களே, இன்றைய கிறிஸ்தவத்தோடு, யூதாவின் நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால், அப்படியே அச்சில் ஊற்றி எடுத்தாற்போல் இருக்கிறதென்பதை உணர்வுள்ள ஒவ்வொரு மனிதனும் ஒத்துக்கொண்டாக வேண்டும். பரிசுத்த வேதாகமம் சொல்லும் உண்மையான சபை பற்றியும், (மத். 16:18) புதிய ஏற்பாடு போதிக்கும் உண்மையான உபதேசம் பற்றியும் (2யோவா 9), கிறிஸ்து காட்டிய உண்மையான ஆராதனை பற்றியும் (யோவா 4:24) எடுத்துச்சொன்னால், எரேமியா காலத்து யூத ஜனங்களைப் போல் நாங்கள் "அவைகளைக் கேட்கமாட்டோம்" அவைகளில் "நடக்க மாட்டோம்"

என்று அடம்பிடிக்கிறார்கள். யூதாவின் ஜனங்கள் விக்கிர கங்களின் பின்னால் அலைந்தது போல், இவர்கள் பெரிய கட்டிடங்களின் பின்னாலும், போலியான மதத்தலைவர்கள் பின்னாலும், பக்திவேடமனிந்து நாடகமாடுபவர்களின் பின்னாலும், மாயமாலத்தையே மூலதனமாக வைத்து ஏமாற்றுவதையே தொழிலாகக் கொண்டிருக்கும் மத வியாபாரிகளின் பின்னாலும், ஜனங்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை மையப்படுத்தி பொய் வாக்குகளைத் தந்து, தங்கள் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள முயற்சிக்கும் வஞ்சகர்கள் பின்னாலும் வெட்கமில்லாமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இருதயக் கடினமானது பல பாவங்களுக்கும், தீமைக்கும் காரணமாக இருக்கும் என்பதால்தான் எபிரெய ஆசிரியர், பழைய ஏற்பாட்டுச் சம்பவங்களை எடுத்துச் சொல்லி, **உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்** என்று ஒரு ஏழு வசன இடைவெளியில் இரண்டு முறை கூறுகிறார் (எபி 3:8,15).

ஆகையால், நாம் ஒவ்வொருவரும் இருதயத்தைக் கடினப்படுத்தி உண்மையானவைகளுக்கு நம்முடைய செவியை விலக்கி, ஆவிக்குரிய ரீதியில் தாறுமாறானவைகளுக்கு நம்முடைய நடைகளை ஒப்புக்கொடுத்து விடாமல், சத்தியத்தை மாத்திரம் நேசிக்கிறவர்களாக இருப்போம். இப்படி செய்வோமானால், தேவனால் கொடுக்கப்பட்ட சத்தியமானது நிச்சயம் நம்மை விடுதலையாக்கும் (யோவா. 8:32).

## II <u>பாவ வியாதிக்கான மருந்து</u>

"கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ"? என்பதிலிருந்து நமக்கு கிடைக்கும் அடுத்த பாடம், பாவ வியாதிக்கு மருந்து உண்டு என்பது.

கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ என்பதும் யூதவின் ஜனங்களைப் பீடித்திருக்கும் பாவ வியாதிக்கு மருந்து இல்லையோ என்பதும் ஒன்றுதான். எப்படி சரீரத்தில் ஏற்படும் ஒரு குறிப்பிட்ட வியாதி குணமா வதற்கு அதற்கான மருந்துகள் கொடுக்கப்படுகிறதோ அதுபோல, யூதாவின் பாவ வியாதிக்கும், வேத வசனங்களைக் கொண்டு தேவனால் மருந்து கொடுக்கப்பட்டது. **கர்த்தரிடத்தில் உண்மையாய் திரும்புங்கள் என்று 3:10லும், சத்தியத்தைத் தேடுங்கள்** என்று 5:1லும், பூர்வ பாதையிலே நடவுங்கள் என்று 6:16லும், கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியுங்கள் என்று 9:13,14 வசனங்களிலும் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இவர்கள் தேவ சத்தத்திற்குக் கீழ்ப்படியவில்லை. ஒருவேளை தேவ எச்சரிப்புக்குக் கீழ்ப்படிந்திருந்தால் சிறையிருப்பும் வந்திருக்காது, அடிமைத் தனமும் வந்திருக்காது (எரே 4:28) ஆனால், இவர்களோ தேவ கட்டளையை பகிரங்கமாக மீறிவிட்டு, வலி தாங்க முடியாத கட்டம் வந்த போது, ஒன்றும் தெரியாதவர்கள் போல, "கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ" என்று கதறுகிறார்கள்.

இன்றைக்கும் கூட இதே நிலைதான் காணப்படுகிறது. உலகத்தைப் பாவ அடிமை தனத்திலிருந்து மீட்கும்படியாக இப்பூவுலகு வந்த இயேசு கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட **புதிய ஏற்பாடு**, இரத்தத்தினாலே

முத்திரிக்கப்பட்ட உடன்படிக்கையாகவும், பாவ உலகத்திற்கு தேவைபடும் மாமருந்தாகவும் உள்ளது. இதிலே கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம், பாவ வியாதியிலிருந்து ஒருவன் விடுதலை பெற முடியும். கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட சுவிசேஷம் இரட்சிப்படைவதற்கு தேவ பெலனாயிருக்கிறது (ரோ 1:16,17) என்று அப்போஸ்தலன் பவுலடியார் கூறியுள்ளதைக் கவனிப்பது நல்லது.

அன்பானவர்களே, எரேமியாவின் நாட்களில் உண்டான பாவ வியாதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தீர்வுக்கும், புதிய ஏற்பாட்டிலே பாவ வியாதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தீர்வுக்கும் ஓர் ஒற்றுமை இருப்பதைக் காண முடியும். ஆம், அங்கே கீலேயாத் மலை, இங்கே கல்வாரி மலை; அங்கே பிசின் மரம்; இங்கே சிலுவை மரம்; அங்கே பிசின் வடிந்தது, இங்கே இரத்தம் வடிந்தது; அங்கே பட்டயத்தைக் கொண்டு காயபடுத்துவதால் வந்தது, இங்கே ஈட்டியால் விலாவில் குத்தியதால் வந்தது; பிசினுக்கு சரீரத்தை குணபடுத்தும் ஆற்றல் இருந்தது. இங்கே கிறிஸ்துவின் இரத்தத்திற்கு ஆத்துமாவை குணமாக்கும் வல்லமை இருந்தது; அங்கே பிசின் விலை மதிப்புள்ளதாக இருந்தது. இங்கே கிறிஸ்துவின் இரத்தமோ விலையில்லாததாக இருக்கிறது. இந்த மகத்துவமுள்ள இரத்தம் தான், மனிதனின் எல்லாப் பாவங்களையும் நீக்கி சுத்திகரிக்கும் வல்லமையுடையதாயிருக்கிறது (1 யோவா 1:7).

ஆம், யாரெல்லாம் ஒன்றான மெய் தேவனிலும், அவருடைய ஒரே பேரான குமாரனிலும் விசுவாசம் வைத்து (மாற் 16:16). தங்களுடைய கடந்த காலப் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, அவைகளிலிருந்து மனந்திரும்பி (2கொரி 7:10, அப். 2:38). இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு (ரோமர். 10:9,10) பாவமன்னிப்புக்கென்று தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுகிறார்களோ (அப். 22:16) அவர்களைக் கர்த்தர், அவராலே கட்டப்பட்ட பிரிவினைகளற்ற **ஒன்றான மெய்ச் சபையிலே** சேர்க்கிறார் (அப். 2:47).

இப்பேருண்மையை அநேகர் புரிந்து கொள்ளாமல், கிறிஸ்தவத்திலே ஏன் இவ்வளவு பிரிவுகள்? ஏன் இவ்வளவு சபைகள்? ஏன் ஒற்றுமை இல்லை? ஏன் அவர்களுக்குள் ஒரு மனம் இல்லை? ஏன் ஒருங்கிணைந்த செயல்பாடு இல்லை? ஏன் பின்பற்றும் கொள்கைகளில் வேறுபாடு? என்றெல்லாம் நல்மனம் படைத்த சில மனிதர்கள் அங்கலாய்க்கிறார்கள், இவர்களின் இந்த அங்கலாய்ப்பு, கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? என்று யூதாவின் ஜனங்கள் அங்கலாய்த்தது போன்றே உள்ளது. கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு, மேலே உள்ள கேள்விகளுக்கு மாத்திரமல்ல, இன்னும் கிறிஸ்தவ மார்க்க உலகத்திலே கேட்கப்படும் எல்லாக் கேள்விகளுக்கும் பதிலாக உள்ளது.

ஆகையால், இனிமேலும் நாம் இப்படி கேட்கிறவர்களாக இல்லாமல், புதிய ஏற்பாடு சொல்லும் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு ஒப்புக்கொடுத்து அதன்படி மாத்திரம் வாழ்கிறவர்களாக இருப்போம்.

## III இரண வைத்தியன் இருக்கிறார்

கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? என்ற வசனப் பகுதியிலிருந்து நமக்கு கிடைக்கும் இன்னுமொரு பாடம், பிசின் தைலம் மாத்திரமல்ல, இரண வைத்தியனும் அங்கே இருக்கிறார் என்பது.

எரேமியாவின் நாட்களில், கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ என்று அங்கலாய்த்தவர்கள், அத்தோடு நிறுத்தாமல், இரண வைத்தியனும் அங்கே இல்லையோ? என்றும், பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையமாற் போனாள்? என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர். எப்பொழுதும், ஒரு காயத்திற்குப் போடப்படும் மருந்து இருந்தால் மட்டும் போதாது, அதைக் கட்டுவதற்கு வைத்தியனும் தேவைப்படுகிறார். எரேமியாவின் மக்கள் பாவ வாழ்க்கையில் முழுகினவர்களாக இருந்தாலும், தங்கள் அறிவை முற்றிலும் அடகு வைத்து விடவில்லை என்பதற்கு இந்தக் கேள்வி ஒரு சான்று.

புதிய ஏற்பாட்டிலே, இயேசு வைத்தியராக இருக்கிறார் என்ற பொருளில் வசனங்கள் பல உண்டு. “இயேசு அதைக் கேட்டு பிணியாளி களுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டி யதில்லை; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்பு கிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்” (மாற் 2:17) லூக்கா 5:31-லும் இதே கருத்து உள்ளது. இப்பகுதிகளில், இயேசு வைத்தியராகச் சொல்லப்படுவதற்குக் காரணம், ஒரு வேளை, அவர் பாவம் செய்யாதவராக இருந்தாலும், பாவ வியாதியின் தன்மையை அறிந்தவராகவும், அது தரும் வேதனையை தெரிந்தவராகவும், அதன் கொடுமையை அனுபவித்தவராகவும் இருக்கிறார் (ஏசாயா 53:3-9 1 பேதுரு 2:22, எபி 4:15).

மத். 8:16,17 வசனங்கள் அவர் தமது **வார்த்தைகளாலே** அவைகளைத் துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார் என்று கூறுகிறது. இங்கே, இயேசுவின் வார்த்தைகள் ஒருவனுடைய பிணி சொஸ்த மாகும் காரியத்தில் முக்கியப் பங்காற்றுகிறதென்பதை நாம் கவனிக்கத் தவறிவிடக் கூடாது. சரீரப் பிணிகளை மாத்திரமல்ல பாவப் பிணிகளையும் அவருடைய வார்த்தைகள் குணமாக்குகிறது. **கிறிஸ்துவின் இரத்தம் நம்மைப் பாவங்களறக் கழுவுகிறது** என்பது உண்மைதான் (வெளி. 1:5); கிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்பதும் உண்மைதான் (ரோமர் 5:9) ஆயினும், குணப்படுத்தும் இந்த பிசினானது அவருடைய வார்த்தைகளடங்கிய சுவிசேஷத்தினால் செயல்வடிவம் பெற்று பாவ வியாதியிலிருந்து விடுதலை தருகிறது. ஆம், ஒருவன் புதிய ஏற்பாட்டு உபதேசச் சட்டத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படியும் போது (ரோமர் 6:17) கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமான சுகம் சாத்தியமாகிறது. கிறிஸ்து நமக்காக கிருபையாக சிந்தின இரத்தத்தோடு அவருடைய வார்த்தைகள் சம்பந்த மாவதால் தான், அப்போஸ்தலன் பவுல், எபேசு பட்டணத்து மூப்பர்களோடு, மிலேத்துவிலே பேசும்போது, உங்களை, **கிருபையுள்ள வசனத்திற்கு** ஒப்புக்கொடுக்கிறேன் என்றார் (அப். 20:32).

ஆனால், அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி ஜனங்கள் தேவனுடைய வார்த்தைகளின் வல்லமையையும், கிறிஸ்துவின் வார்த்தைகளின் மேன்மையையும் புரியாதவர்களாகவே வாழ்ந்து கொண்டுள்ளனர். எரேமியாவின் நாட்களில், அவர்களுடைய சரீர வாழ்க்கை சீரழிந்ததிற்கும், நம்முடைய நாட்களில் கிறிஸ்தவ சமுதாயத்தின் ஆவிக்குரிய வாழ்க்கை அல்லல்பட்டுக் கிடப்பதற்குக் காரணம், தேவனுடைய வார்த்தைகளை புறக்கணிப்பதும், அவைகளை அப்படியே ஏற்றுக்கொள்ள மறுப்பதும் தான்.

எரேமியா காலத்து மக்கள் மனந்திரும்பாமல் போனதற்கான காரணங்களில் பிரதானமானது, தங்களைப் பாவ வியாதிப் பிடித்திருக்கிற தென்பதையே அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் போனதுதான். எரே 8:6ல் **நான் என்ன செய்தேன்** என்று வாய் கூசாமல் சொல்லியுள்ளார்கள்! என்ன ஆச்சரியம்! அதே நிலையும், நினைப்பும் இன்றைக்கும் இருக்கிறது. ஆம், எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றிருக்கிறார்கள் (ரோமர் 3:23) என்று வேத வசனங்கள் தெளிவாகச் சொல்லியிருந்தும், இன்னும், அநேகர் தங்களை பாவிகளென்றே ஒத்துக்கொள்வதில்லை. பாவி என்று தன்னை ஒத்துக் கொள்ளாத ஒருவன் அதிலிருந்து விடுபடும் வழியை எப்படி அடைய முடியும்? **பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் என்பது எப்போதும் நம் நினைவில் நின்று கொண்டே இருக்க வேண்டும்** (நீதி 28:13).

இன்னொரு சாராரும், எரேமியாவின் நாட்களில் இருந்தார்கள். அவர்கள், பாவத்தினால் பெரிய ஆபத்தில்லையென்றும், எப்பொழுது வேண்டுமானாலும் அதிலிருந்து விடுதலையாக முடியும் என்று எண்ணினர் (எரே 8:5). அருமையானவர்களே, தேவன் நீடிய பொறுமையுள்ள வராயிருப்பது உண்மைதான், வேத வசனங்கள் அப்படித்தான் சொல்கிறது (ஏசா 53:8,9, 2பேது 3:9) ஆனால், அதே வசனங்கள், ஒரு மனிதனுக்கு மரணம் எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம் என்பதையும் சொல்கிறது. (யாக். 4:14,15) இப்பொழுதே அனுக்கிரக காலம், இன்றே இரட்சண்ய நாள் என்று சொல்லுவதையும் (2கொரி 6:2), கிறிஸ்துவின் வருகை எப்பொழுது வேண்டுமானாலும் இருக்கலாம் (மத். 24:36) என்று வலியுறுத்துவதையும் நாம் கவனிக்காமல் விட்டுவிடக் கூடாது.

ஆகையால், அன்பானவர்களே, எரேமியா காலத்து மக்களைப் போல, "கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ"? இரண வைத்தியன் இல்லையோ? என்றெல்லாம் நாம் இன்னும் கேட்டுக்கொண்டிராமல், பரம வைத்தியராகிய இயேசுவும், எப்படிப்பட்ட பாவப் பிணியையும் போக்கும் அவருடைய இரத்தமும் இருக்கிறதென்பதை அறிந்து, அவருடைய வார்த்தைகளுக்கு நம்மை முற்றிலும் ஒப்புக்கொடுப்போம். அதன் மூலம் சரீர அழிவிலிருந்தும், ஆவிக்குரிய அழிவிலிருந்தும் நம்மைக் காப்பாற்றிக் கொண்டு, இயேசுவின் வருகையில் அவரோடே கூட எடுத்துக் கொள்ளப் பட்டு (1தெச 5:17) நித்திய வாழ்வுக்கு பங்காளிகளாக மாறுவோம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

**S. ராஜநாயகம்**

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

*மாணவர் சேர்க்கை அறிவிப்பு*

# EKKLESIA BIBLE COLLEGE

P.O. Box-27, KANGAYAM - 638 701. India.

## STUDENTS ADMISSION NOTIFICATION

**பு**திய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், கிறிஸ்துவின் நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் சொல்லவேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட **வாலிபர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன. **திருமணமாகி 35 வயதைத் தாண்டாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

**காலம்** : **3 வருடம்** (செமஸ்டர் முறை)

**Duration** : **3 Years (Semester System)**

**கல்வித்தகுதி** : **+2 தேர்ச்சி (அல்லது) பட்டப்படிப்பு**

**Qualification** : **+2 Pass (or) Any Degree**

**பட்டம்** : **வேதயியலில் இளங்கலை பட்டம்**

**Degree** : **B.B.S. (Bachelor of Biblical Studies)**

**தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்**

<u>விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :</u>

**இயக்குநர்**
எக்லீசியா வேதாகமக் கல்லூரி
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. இந்தியா
✆ 04257 - 230030, 230603 செல் : 98427 - 30382

# விக்கிரக ஆராதனை என்னும் பாவம்

மரத்தினாலும், கல்லினாலும், உலோகத்தினாலும், செய்யப்பட்ட ஒரு விக்கிரகம் ஏதோ ஒரு தேவனையோ அல்லது ஒரு தேவதையையோ குறிப்பதாக கருதப்படுகிறது. ஒருவர் தமது நேரத்தை செலவழித்து தொழுது கொள்ளத் தக்க வகையில், அவைகள் மனித உருவிலோ அல்லது இயற்கை அமைப்பிலோ அல்லது வேறு எந்த வடிவிலும் காணப்படும். விக்கிரக வணக்கம் என்பது மிகவும் புராதனமானதும், தற்போதைய நவ நாகரிகமானதுமாகும். அது அநேக வடிவத்திலே வந்தாலும் அது இன்னும் விக்கிர ஆராதனையும், ஜீவனுள்ள ஒரே ஒரு தேவனை தொழுது கொள்ளாத பாவமென்றும் இந்த விக்கிரக வணக்கம் முத்திரை பதிக்கப்பட்டது.

விக்கிரகங்களைக் குறித்து வேதம் கூறுகிறது; **என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். மேலே வானத்திலும் கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறேன்.** (யாத்தி : 20:3-5). **ஆகையால், நீ இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி; திரும்புங்கள்; உங்கள் நரகலான விக்கிரகங்களை விட்டுத் திரும்புங்கள்; உங்கள் சகல அருவருப்புகளையும் விட்டு உங்கள் முகங்களைத் திருப்புங்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்** (எசே. 14:6).

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தொடர்ந்து கூறும்போது, **ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப் பண்ணலாகாதென்றும், விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும், விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுத வேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன்.** (அப். 15:19,20). **பிள்ளைகளே நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக ஆமென்** (1 யோவா. 5:21).

ஏவுதல் பெற்ற வேத எழுத்தாளர்கள் விக்கிரகமும் அவைகளை பணிந்து கொள்வதும் அபத்தம் என காட்டுகின்றனர். அவர்கள் தேசம் விக்கிரகங்களாலும் நிறைந்திருக்கிறது; தங்கள் கைகளின் கிரியையும், தங்கள்

விரல்கள் உண்டு பண்ணினதையும் பணிந்து கொள்கிறார்கள். சிறியவனும் குனிகிறான், பெரியவனும் பணிகிறான்; ஆகையால் அவர்களுக்கு மன்னியாதிருப்பீர் (ஏசா. 2:8,9). விக்கிரகங்களை உருவாக்குகிறயாவரும் வீணர். அவர்களால் இச்சிக்கப்பட்டவைகள் ஒன்றுக்கும் உதவாது; அவைகள் ஒன்றும் காணாமலும், ஒன்றும் அறியாமலும் இருக்கிறதென்று தங்களுக்கு வெட்கமுண்டாக அவைகளுக்குத் தாங்களே சாட்சிகளாயிருக்கிறார்கள். ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி விக்கிரகத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிப்பட்டவன்? இதோ, அவனுடைய கூட்டாளிகளெல்லாரும் வெட்கமடைவார்கள், தொழிலாளர்கள் நரஜீவன்கள் தானே; அவர்கள் எல்லாரும் கூடிவந்து நிற்கட்டும்; அவர்கள் ஏகமாய் திகைத்து வெட்கப்படுவார்கள், கொல்லன் இரும்பைக் குறட்டால் இடுக்கி, உலையிலே காய வைத்து, சுத்திகளால் அதை உருவாக்கி தன் புயபலத்தினால் அதைப் பண்படுத்துகிறான். பட்டினியாயிருந்து பெலனற்றுப் போகிறான்; தண்ணீர் குடியாமல் களைத்துப்போகிறான். தச்சன் நூல் பிடித்து, மட்டப் பலகையால் மரத்துக்கு குறிபோட்டு, உளிகளால் உருப்படுத்தி, கவரசத்தினால் அதை வகுத்து, மனுஷ சாயலாக, மனுஷ ரூபத்தின்படி உருவமாக்குகிறான். அதை கோவிலிலே நாட்டி வைக்கிறான். அவன் தனக்குக் கேதுருக்களை வெட்டுகிறான். ஒரு மருத மரத்தையாவது, ஒரு கர்வாலி மரத்தையாவது தெரிந்து கொண்டு, காட்டு மரங்களிலே பெலத்த மரத்தைத் தன் காரியத்திற்காக வளர்க்கிறான், அல்லது அசோக மரத்தை நடுகிறான், மழை அதை வளரச் செய்யும் மனுஷனுக்கு அவைகள் அடுப்புக்காகும் போது, அவன் அவைகளில் எடுத்து குளிர் காய்கிறான். நெருப்பை மூட்டி அப்பமும் சுடுகிறான். அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டு பண்ணி, அதைப் பணிந்து கொள்கிறான், ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து, அதை வணங்குகிறான், அதில் ஒரு துண்டை அடுப்பில் எரிக்கிறான், அதில் ஒரு துண்டினால் இறைச்சியை சமைத்துப்புசித்து, பொரியலைப் பொரித்து, திருப்தியாகி, குளிரும் காய்ந்து, ஆ,ஆ அனலானேன்; நெருப்பைக் கண்டேன் என்று சொல்லி; அதில் மீதியான துண்டைத் தனக்கு விக்கிர தெய்வமாகச் செய்து, அதற்கு முன் விழுந்து அதை வணங்கி, நீ என் தெய்வம், என்னை இரட்சிக்க வேண்டும் என்று அதை நோக்கி மன்றாடுகிறான். அறியாமலும், உணராமலும் இருக்கிறார்கள்; காணாதபடிக்கு அவர்கள் கண்களும், உணராதபடிக்கு அவர்கள் இருதயமும் அடைக்கப்பட்டிருக்கிறது. அதில் பாதியை அடுப்பில் எரித்தேன்; அதின் தழலின்மேல் அப்பத்தையும் சுட்டு, இறைச்சியை பொரித்துப் புசித்தேன்; அதில் மீதியான துண்டை நான் அருவருப்பான விக்கிரகமாக்கலாமா? ஒரு மரக்கட்டையை வணங்கலாமா

என்று சொல்ல, தன் மனதில் அவனுக்குத் தோன்றவில்லை; அம்மாத்திரம் அறிவும் சொரணையும் இல்லை. அவன் சாம்பலை மேய்கிறான்; வஞ்சிக்கப் பட்ட மனம் அவனை மோசப்படுத்தினது; அவன் தன் ஆத்துமாவை தப்பு விக்காமலும் என் வலது கையில் அபத்தம் அல்லவோ இருக்கிறதென்று சொல்லாமலும் இருக்கிறான். (ஏசாயா. 44:9-20).

இது சுத்த அபத்தம் என்பதைக் காட்ட தாவீது எழுதுகிறதாவது; எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, **எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும். அவர்களுடைய தேவன் இப்பொழுது எங்கு என்று புறஜாதிகள் சொல்வானேன்? நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்குச்சித்தமான யாவையும் செய்கிறார். அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையு மாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்குக் கண்களிலிருந்தும் காணாது, அவைகளுக்கு காதுகளிலிருந்தும் கேளாது. அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது, அவைகளுக்கு கைகளிலிருந்தும் தொடாது அவைகளுக்கு கால்களிலிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. அவைகளைப் பண்ணுகிற வர்களும், அவைகளை நம்புகிற யாவரும் அவைகளைப் போலவே இருக்கிறார்கள்.** (சங். 115:1-8) மீண்டும் புதிய ஏற்பாட்டில் நமக்குக் கீழ்வருமாறு பதிவேடு கூறுகிறது. அத்தேனே பட்டணத்தில் பவுல் அவர்களுக்காக காத்துக் கொண்டிருக்கையில் அந்த பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து (அப். 17:16) **தொடர்ந்து ...... பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று; எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவ பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித் திரிந்து உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே உங்களுக்கு அறிவிக்கிறேன்.** (அப். 17:22-23) மேலும் சொல்லும்போது, அவர் ஆராதிக்கிற தேவன் எல்லாவற்றையும் உண்டாக்கினவரும், அவர் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம் பண்ணுகிறதில்லை என்றும், அவருக்கு உணவோ தண்ணீரோ தேவையில்லை எனவும் சுட்டிக் காட்டுகிறார். மற்றொரு சமயத்தில் அவர், **விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப் பற்றி உலகத்தில் விரக்கிரகமானது ஒன்றுமில்லை என்றும், ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம். வானத்திலும், பூமியிலும் தேவர்கள் எனப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும்,**

அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே ஒரு தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். (1கொரி. 8:4-6).

எனவே, வேதம் விக்கிரக ஆராதனையைக் கண்டிப்பதோடு, விக்கிர ஆராதனைக்காரர்கள் அனைவரும், பொய்யர்கள் போன்ற அநேகரும், நரகத்திலே தள்ளப்படுவார்கள் என்றும் சொல்லுகிறது. (வெளி. 21:8). இன்னொரு புறம் பார்த்தால், வேதம் கூறுவது போலவே, இயற்கையும், பொது அறிவும் ஒரே தேவன் உண்டு என்பதை அறிவுறுத்துகின்றன. (எபேசியர். 4:6) அவர் ஆவியாயிருக்கிறார் (யோவா. 4:24) நாம் அவருக்கே ஆராதனையும் செய்வோமாக. (1தெச. 1:9).

*J.C.* ***சோட்*** ***J.C. Choate***

## கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்

தமிழகத்தின் தெற்குச் சீமையில் பிறந்து, இளம் வயதில் மலேசியா சென்று அங்கேயே குடியுரிமை பெற்று விட்ட நிலையிலும், தான் பிறந்த மண்ணின் ஆத்துமாக்களின் மீது பாரம் கொண்டு, பல ஆண்டுகளாக ஊழியத்திற்கு உதவிகள் புரிந்து வந்த S.M. **ஞானம் ஐயா (S.M. GNANAM)** அவர்கள் கடந்த **5.6.2006 அன்று** மறுவாழ்வுக்குள்ளாகப் பிரவேசித்தார் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஐயாவைச் சார்ந்த குடும்பத்தாருக்காகவும், சபையாருக் காகவும் ஜெபியுங்கள். **- ஆசிரியர்**

## சகோ. காளப்பன் காலமானார்

எனது அருமை சகோதரனும், பல ஆண்டுகள் எனக்கு பழக்கமுள்ளவரும், செஞ்சி பட்டணத்திலும், அதனை ஒட்டிய கிராமங்களிலும் கர்த்தருடைய ஊழியத்தைச் சிறப்பாகச் செய்தவருமான **சகோ. காளப்பன்** 17.5.2006 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அவர் ஊழியம் செய்த சபையாரையும் அவர் விட்டுச் சென்ற மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளையும் ஜெபத்தில் நினைத்துக்கொள்ளுங்கள். **- ஆசிரியர்**

பெண்கள் பகுதி

# தங்கள் பிள்ளைகளின் திருமணத்தின் போது பெற்றோர்கள் கவனிக்க வேண்டியவைகள்

**கி**றிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! இம்மாதமும் உங்களோடு சேர்ந்து கர்த்தருடைய ஆலோசனைகளைக் கற்றுக்கொள்ள தேவன் கொடுத்த சிலாக்கியத்திற்காக அவருக்கு நன்றி

பெற்றோர்களாகிய நமக்கு பிள்ளைகளை வளர்ப்பது பற்றி வேதாகமத்தில் நிறைய ஆலோசனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஞாயிறு ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளச் செய்வது, நன்மை தீமை அறியும் வயது வந்தவுடன் பாவங்கள் போக தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுப்பதின் மூலமாக கர்த்தரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து, கிறிஸ்து தன் சொந்த இரத்தத்தை சிந்தி சம்பாதித்த ஒரே சபையாகிய கிறிஸ்துவின் சபையில் அங்கமாகி, புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படியாக தங்கள் பிள்ளைகளை வழி நடத்துவது பெற்றோரின் பொறுப்பு.

பின்பு, தங்கள் பிள்ளைகள் திருமண வயதை அடைந்தவுடன் அவர்களுக்கு ஏற்ற துணையை தெரிந்தெடுப்பதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். கிறிஸ்துவின் சபையில் அங்கமாக இருக்கும் நாம் எந்தெந்த காரியங்களை தெரிந்து வைத்திருக்க வேண்டும்? எது மிகவும் முக்கியம்?

தேவ சித்தத்தின்படி வாழும் பெற்றோர்கள், தேவனுடைய வார்த்தையின் மேல் விசுவாசமாயிருக்கும் பெற்றோர்கள் முதன் முதலாவதாக கவனம் செலுத்த வேண்டிய காரியம் சம்பந்தப்பட்ட மகனோ, மகளோ ஓர் **ஒப்புக்கொடுத்த கிறிஸ்தவனாக** இருக்கிறானா? என்பதுதான்.

சில சமயங்களில், சில பெற்றோர்கள், எந்த சபையில் இருந்தால் என்ன, எந்த முறையில் ஆராதனை செய்தால் என்ன பெயரளவு கிறிஸ்தவர்களாக இருந்தாலே போதும் என நினைத்து, செயல்பட்டும் விடுகின்றனர். அப்படிச் செய்வதை தேவன் விரும்பமாட்டார். மாறாக, ஆவிக்குரிய சில கேள்விகளை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும் திருமணம் செய்து கொள்ளும் இந்த ஆண் மகன் குடும்பத்திற்கு தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தும் தகுதியைப் பெற்றிருக்கிறானா? அவன் அவ்வாறு ஒரு பலமுள்ள கிறிஸ்தவனாக இல்லாத பட்சத்தில், எவ்வாறு தன் மனைவி, பிள்ளைகளை நித்திய இராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்வதற்காக அழைத்துச் செல்ல இயலும்?

கிறிஸ்தவனாக இல்லாத ஓர் ஆணாக இருந்தால், அவனுடைய பழக்க வழக்கங்கள் எவ்வாறு இருக்கும்? குடிப்பழக்கம், பொய், ஏமாற்றுவது, ஒழுக்கக்கேடு, பிள்ளைகளை சரியாக பராமரிக்காமல் போவது போன்ற காரியங்களை ஒருவன் பெற்றிருந்தால், அவன் அந்த குடும்பத்துக்கு சமாதானத்தை கொண்டு வர இயலுமா? அல்லது சண்டையை கொண்டுவரக்கூடியவனாக இருப்பானா?

சரி, பெண் பிள்ளைகளை எடுத்துக்கொண்டால், நாளைக்கு தாயாகப் போகிறவர்கள் அவர்கள் தான், தகப்பனை விட தாய்தான் அதிக நேரம் பிள்ளைகளோடு கழிக்கக்கூடிய ஆசீர்வாதத்தை பெற்றிருக்கிறார்கள். எனவே அவள் கிறிஸ்தவளாக இல்லாத பட்சத்தில் தன் பிள்ளைகளுக்கு எவ்வாறு ஆவிக்குரிய விஷயங்களைக் கற்றுக் கொடுக்க முடியும்? கிறிஸ்தவர்களல்லாதவரை மணக்க நேரிடும் போது கொஞ்சம், கொஞ்சமாக கிறிஸ்துவை விட்டும், சபையை விட்டும் விலகிச் செல்வதற்குத்தான் அது வழிவகுக்கும்.

**அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக. நீதிக்கும், அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும், இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும், பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும், விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது?..... நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே** (2கொரி. 6:14-18) மேலே காணப்படும் இவ்வசனங்கள் மூலம் நம்முடைய ஐக்கியம், நம்முடைய தெரிந்தெடுத்தல், நம்முடைய சம்பந்தம் யாருடன் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பது நமக்கு நன்றாக புரிகிறது. ஏனென்றால் கிறிஸ்தவர்களாகிய **நாம் பிரித்தெடுக்கப்பட்டவர்கள். அசுத்தமானவைகளோடு சம்பந்தம் கொள்ளக்கூடாது**. (வ. 17).

பரலோகத்திலிருக்கிற நம் தந்தையின் அனந்த ஞானம் இவ்வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நம்மேல் அன்பு வைத்திருக்கும் நம் தேவன் தெரிந்தெடுத்தல் காரியங்களில் நாம் தவறு செய்து விடக்கூடாதென்றும், நம்மை காப்பாற்றிக் கொள்ளவும் எவ்வளவு சிறந்த ஆலோசனைகளை கொடுத்துள்ளார்.

ஒரு கிறிஸ்தவ ஆண், ஒரு கிறிஸ்தவ பெண்ணை விவாகம் செய்து கொள்ளும்பொழுது, இருவரும் சேர்ந்து பலமான ஒரு கிறிஸ்தவ குடும்பத்தை கட்டியெழுப்ப முடியும். தங்கள் பிள்ளைகளுக்கும் அந்த விலைமதிக்க முடியாத விசுவாசத்தை கற்றுக் கொடுக்க முடியும்.

எனவே, பிரியமான தாய்மார்களே, சகோதரிகளே, தேவன் சொல்லியிருக்கும் ஆலோசனைகளுக்கு செவி கொடுத்து நம்முடைய காரியங்களை செய்வோம். மீதியை கர்த்தர் பார்த்துக்கொள்வார்.

நாம் இவ்வாறு செய்வோமானால் எதிர்காலத்தில் சிறந்த முன்மாதிரியுள்ள உண்மை கிறிஸ்தவக் குடும்பங்களையும், சபையையும் கட்டமுடியும். இதுவும் நாம் தேவனுக்காக செய்யும் ஊழியம்தான். எனவே அருமையான சகோதரிகளே வசனத்தின்படி செயல்படுவோம். நிச்சயம் அவர் நம்மை ஆசீர்வதிப்பார். ஆமென்.

**ரேச்சல் இராஜநாயகம்**

## நாளும் நடப்பும்

1. தமிழக அரசு விற்பனை வரியைத் தள்ளுபடி செய்து, டீசல் விலையை லிட்டருக்கு 45 பைசா குறைத்துள்ளது.
2. கல்வி, வேலை வாயப்பில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு அதிகரிக்கப்படும் என மத்திய அமைச்சர் மீராகுமார் கூறியுள்ளார்.
3. இந்தியத் திருநாட்டின் தலைமைத் தேர்தல் ஆணையராகப் பதவி ஏற்கவுள்ள கோபாலசாமி, ஜோதிட பாடத் தேர்வுக்காக விழுந்து, விழுந்து படித்துக் கொண்டிருக்கிறாராம்!
4. தமிழர்களுக்கு மொழி உணர்வு குறைவு என்று, கவிஞர்கள் அப்துல் ரகுமானும், தமிழன்பனும் கூறியுள்ளனர்.
5. நேபாள மன்னரின் ரத்து அதிகாரம் ரத்து செய்யப் பட்டுள்ளது.
6. உலகக் கோப்பை கால்பந்து போட்டி உச்சகட்டத்தை அடைந்துள்ளது.

வாலிபர் பகுதி

# வாலிபரே நீங்கள் பலவான்களாயிருக்கிறீர்கள் ...

வாலிப பிராயத்திலே கர்த்தரை சேவிக்கிற ஒவ்வொரு வாலிப உள்ளங்களுக்குத் தன் வாலிப வயதில் தன்னையே ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே வாழ்த்துக்கள். ஒரு மனிதன் பிறந்தது முதல் அவன் மரிக்கிற வரைக்கும் அவனுடைய ஒவ்வொரு பருவத்திலும் அவன் எப்படி வாழ்ந்தால் நித்திய ஜீவனை பெறலாம் என்று திட்டமாக போதிப்பது நம்முடைய பரிசுத்த வேதாகமம் மட்டுமே. இப்படி போதிக்கிற வேதாகமம் வாலிப பருவத்தை குறித்து எச்சரித்தும் அந்த பருவத்தில் எப்படி நடந்தால் தன்னைக் காத்துக் கொள்ள முடியும் என்பதையும் போதிக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் உலகமானது அறிவியல் ரீதியில் நவீன யுகமாக மாறி இருப்பதால். வாலிபர்களுடைய பாவங்களும் இன்றைக்கு நவீனமாகவே மாறி இருக்கிறது, வாலிபர்களும் இன்றைக்கு தங்களை சாத்தானுக்கு ஒப்புக் கொடுத்து பாவ சந்தோஷங்களை மன நிறைவோடு செய்து கொண்டு இருக்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம் என்றால் கர்த்தரைப் பற்றும் பயம் இல்லாததுதான்.

அநேக வாலிபர்கள் நான் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனைக்கு ஒழுங்காக தான் செல்கிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால், மற்ற நாட்களில் கர்த்தரை நினைக்காமல் தங்கள் பாவ வாழ்க்கையை தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் மட்டும் நீதிமான்களாக இருந்து மற்ற நாட்களில் அநீதிமான்களாக இருக்கிறார்கள். இதற்கு காரணம் என்னவென்றால் கர்த்தரைப் பற்றும் பயம் இல்லாததுதான். இதனால் தான் நீதி மொழிகள் ஆசிரியர் நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு (நீதி. 25:17) என்று எச்சரிக்கையோடு எழுதுகிறார். நாம் ஏன் நாள்தோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடு இருக்க வேண்டும் என்று இக்கட்டுரையின் மூலம் கற்றுக்கொள்வோம்.

## I <u>பொல்லாத உலகமாக இருக்கிறது</u>

இந்த உலகத்தில் தற்போது ஏற்பட்டு இருக்கிற அறிவியல் முன்னேற்றத்தால் நாம் சௌரியமாக வாழ்ந்தாலும் இந்த உலகம் இன்னமும் இருளின் அதிகாரத்தில் (கொலோ 1:13) இருக்கிறது என்று நம்முடைய வேதாகமம் போதிக்கிறது. அதோடு மாத்திரம் அல்ல மனுஷருடைய

கிரியைகளும், பொல்லாதவைகளாக இருக்கிறது (யோவா 3:19) என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் எச்சரித்துள்ளார்.

ஆகையால், வாலிபர்களே இந்த உலகத்தில் பாவத்தோடும், பொல்லாங்கனாகிய பிசாசோடும் நமக்கு போராட்டங்கள் இருக்கிறது, அவனை நாம் ஜெயிக்க வேண்டும் மேலும் வசனம் "பிசாசானவன் எவனை விழுங்கலாமோவென்று கெர்ச்சிக்கிற சிங்கம் போல சுற்றித்திரிகிறான்" (1பேது 5:8) என்கிறது. ஆனால், வாலிபர்களாகிய நாம் கவனிக்க வேண்டிய விசயம் என்னவென்றால் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தில் வாழ்ந்த வாலிபர்கள் பொல்லாங்கனாகிய சாத்தானை ஜெயித்திருக்கிறார்கள் யோவான் ஆசிரியர் எழுதுவதை கவனியுங்கள். "வாலிபரே பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன்" (1யோவா. 2:13) என்கிறார். அருமையான வாலிபர்களே முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தில் வாழ்ந்த வாலிபர்களே பொல்லாங்கனை ஜெயித்திருக் கிறார்கள் என்றால் நாம் ஏன் ஜெயிக்க முடியாது.

மேலும் யோவான் ஆசிரியர் வாலிபர்களை பார்த்து "வாலிபரே நீங்கள் பலவான்களாயிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன் (1 யோவா 2:14) என்கிறார் பாருங்கள் அவர்கள் சாத்தானை எதிர்த்து ஜெயித்து பலவான்களாக மாறியிருக்கிறார்கள். அவர்களால் சாத்தானை எதிர்த்து ஜெயித்து பலவான்களாக மாற முடியும் என்றால் நம்மால் ஏன் முடியாது, நாம் சாத்தானை ஜெயிக்க வேண்டுமென்றால் "நாள்தோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிருக்க வேண்டும்" (நீதி. 23:17) அதைக் குறித்து நாம் சற்று விரிவாக பார்ப்போம்.

## II <u>நமக்குள் இருக்க கூடிய பயம்</u>

அநேக வாலிபர்களுக்கு இருக்க கூடிய பிரச்சனை தங்களுக்குள்ளாகவே எல்லா விசயத்திலும் பயந்து கொண்டு இருப்பதுதான் அதாவது, தங்களுக்குள் இருக்கக் கூடிய தாழ்வு மனப்பான்மையின் காரணமாக பயப்படுவது, தங்களுக்குள் திறமை இல்லையோ, அழகு இல்லையோ என்ற மனப்பான்மையை வைத்துக்கொண்டு பிறரிடத்தில் பேசுவதற்கே பயப்படுவார்கள் அதில் மற்றொரு வகை என்னவென்றால் தவறு அல்லது பாவம் செய்கின்றபோது அதினிமித்தமாக பயப்படுவது, ஆதாம் பாவம் செய்த போது அவன் பயந்து ஒளிந்து கொண்டான் (ஆதி. 3:10) என்று வேத வசனம் கூறுகிறது.

இயேசு கிறிஸ்து கடலில் தண்ணீர் மீது நடந்தபோது பேதுரு பார்த்து தானும் நடக்க வேண்டும் என்று விருப்பப்பட்டு இயேசு கிறிஸ்துவின்

அனுமதியோடு கடலில் நடந்தபோது திடீரென கடலுக்குள் அமிழ்ந்து போனான், ஏன் என்னவென்று நாம் பார்க்கின்றபோது வசனம் சொல்லுகிறது. "பேதுரு பயந்து அமிழ்ந்து போனான்" (மத். 14:30) என்கிறது. ஆகையால் நமக்குள் பயம் வருகிறது என்றால் நாம் பாவம் செய்திருப்போம் அல்லது அவிசுவாசிகளாக இருப்போம்.

ஆகையால், வாலிபர்களே நமக்குள் இருக்க கூடிய பயத்தை நாம் விரட்டியடிக்க வேண்டும் "தேவன் நமக்கு பயமுள்ள ஆவியை கொடாமல் பலமுள்ள ஆவியை கொடுத்து இருக்கிறார் (2 தீமோ 1:7) ஆகையால், நாம் பலமுள்ளவர்களாக இருப்போம்.

**III *மற்றவர்கள் மேல் இருக்க கூடிய பயம்***

நமக்கு இருக்க கூடிய மற்றொரு பிரச்சனை மற்றவர்களை பார்த்து பயப்படுவது, அதாவது மற்றவர்களின் தோற்றத்தை பார்த்தோ அல்லது அவர்களுடைய திறமையை பார்த்தோ அவர்களிடத்தில் பேசுவதற்கே பயப்படுவது, இதற்கும் காரணம் நமக்குள் இருக்க கூடிய தாழ்வு மனப்பான்மைதான்

இப்படிப்பட்ட பயம் இருக்கக் கூடிய வாலிபர்கள் தங்களுடைய வாழ்க்கையிலும் கிறிஸ்தவ ஜீவியத்திலும் முன்னேற்றம் காண்பது என்பது முடியாத காரியம் ஆகும். அநேக வாலிபர்களுக்கு சபையில் நடத்துனர் பகுதியோ அல்லது ஜெபமோ, வேத வாசிப்பின் பகுதியோ கொடுக்கும்போது ஒன்று எங்களால் முடியாது என்பார்கள் அல்லது சபைக்கு முன்னால் பேசுகின்ற போது நடுக்கத்தோடு உளற ஆரம்பித்து விடுவார்கள்.

இதற்கெல்லாம் என்ன காரணம் மற்றவர்கள் மீது இருக்க கூடிய பயந்தான் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து விடுதலையாகி செங்கடலுக்கு முன்பாக இருக்கும்போது "எகிப்தியர் தங்களுக்கு பின்னே வருகிறதை கண்டு மிகவும் பயந்தார்கள்" (யாத். 14:16) என்கிறது. இதற்கு என்ன காரணம் கர்த்தரிடத்தில் பயம் இல்லாமல் போனதுதான் இப்படியாக அநேக உதாரணங்களை நம்முடைய வேதாகமம் சொல்லிக்கொண்டே போகிறது. நமக்கு நாமே பயப்படுவதும் பிறரிடத்தில் தேவையில்லாமல் பயப்படுவதும் கோழைதனமானது. யோவான் எழுதின வெளிப்படுத்தின விசேஷத்தில் பயப்படுகிறவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் பங்கடைவார்கள் (வெளி. 21:8) என்று எச்சரிக்கையோடு எழுதுகிறார்.

## IV கர்த்தர் மேல் இருக்கக் கூடிய பயம்

வாலிபர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் பயம் இருக்க வேண்டும் அது யார் மீது என்றால் நம்முடைய கர்த்தரின் மீது தான், அவருக்கு பயந்தால் தான் நம்முடைய வாழ்க்கை ஆசீர்வாதமாக இருக்கும், நீதிமொழிகள் ஆசிரியர் எழுதும் போது கர்த்தருக்குப் பயப்படுதலே ஜீவ ஊற்று (நீதி. 14:27) என்று எழுதுகிறார்.

மேலும் அந்த ஆசிரியர் எழுதும் போது நாம் கர்த்தருக்குப் பயப்படுகிறபோது நமக்குள் திட நம்பிக்கை உண்டாகிறது (நீதி. 14:26) என்றும் எழுதுகிறார். ஆகையால், அருமையான வாலிபர்களே "நாம் ஒவ்வொரு நாளும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிருக்க வேண்டும்" (நீதி. 23:17) தானியேல் தீர்க்க தரிசன புஸ்தகத்தில் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்கிற வாலிபர்கள் நேபுகாத்நேச்சாரின் கட்டளைக்கு பயப்படாமல் அக்கினிக்கு தங்களை ஒப்புக் கொடுக்கவும் ஆயத்த மாயிருந்தார்கள் என்பதை நாம் மறுக்க இயலாது. (தானி. 3:18).

இந்த வாலிபர்களின் விசுவாசம் மகத்தானது ஆகும். "தேவன் எங்களை அக்கினிச் சூளையிலிருந்து விடுவிக்காமற் போனாலும், நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை" (தானி. 3:18) என்று தைரியத்தோடு சொன்னார்கள். இதற்கு என்ன காரணம் அவர்கள் ராஜாவுக்கு பயப்படாமல் கர்த்தருக்கே அதிகமாக பயந்திருக்கிறார்கள் மேலும் இயேசு கிறிஸ்து சொல்வதையும் இங்கு நாம் கவனிக்க வேண்டும். "சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" (மத். 10:28) என்று அறிவுறுத்துகிறார்.

ஆகையால், கிறிஸ்துவுக்கு பிரியமான வாலிபர்களே உங்களுக்குள் இருக்க கூடிய பயத்தையும் மற்றவர்கள் மேல் இருக்க கூடிய பயத்தையும் நீங்கள் முழுவதுமாக விட்டு உங்களை உண்டாக்கி இரட்சித்த நம்முடைய கர்த்தருக்கே நீங்கள் அனுதினமும் பயந்து நடங்கள், சாத்தானை ஜெயித்து பலவான்களாக இருங்கள் தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்!

**N. பர்னபாஸ்**
திருப்பூர்.

சிறுவர் பகுதி

# டாக்டர் லூக்கா

சிறு பிள்ளைகளாகிய நமக்கு டாக்டர் ஆகணும், இன்ஜினியர் ஆகணும்னு ரொம்ப ஆசை. அப்படித்தானே. புதிய ஏற்பாட்டிலே, பரலோகத்தின் தேவன் ஒரு டாக்டர் பற்றி நமக்குச் சொல்லியிருக்காரு. அந்த டாக்டர் எப்படிப்பட்ட டாக்டர் என்று இம்மாதம் பார்த்து விடலாமா?

கிறிஸ்தவர்களையெல்லாம், ஒரு காலத்திலே ரொம்பக் கொடுமைப் படுத்தி, பிறகு, நமது இயேசு ஆண்டவரால் சந்திக்கப்பட்டு, பாவங்கள் போக ஞானஸ்நானம் பெற்ற பவுல் (அப். 22:16) இயேசுவுக்காக சிறப்பா ஊழியம் செய்தார். வைராக்கியமாக ஊழியம் செய்தபடியால், சிறையில் அடைக்கப் பட்டார். கிறிஸ்துவுக்காக ஒப்புக் கொடுத்து வாழ்பவர்கள், எந்த இடத்தில் இருந்தாலும் சும்மா இருக்க மாட்டார்கள். அதுபோல, பவுலும் சும்மா இராமல், பல இடங்களில் இருந்த சபைகளுக்கு கடிதங்கள் எழுதினார். அப்படி எழுதின ஒரு கடிதத்தில் தான் லூக்காவை, டாக்டர் லூக்கா என்று கூறுகிறார். (கொலோ. 4:14) இவர் அப்போஸ்தலன் பவுலுக்கு நல்ல நண்பனாக ஊழியத்தில் உதவி செய்பவராகவும் இருந்துள்ளார்.

இந்த டாக்டர் லூக்கா, மூன்றாவது நற்செய்தி நூலையும், அப்போஸ்தலர் நடபடிகள் நூலையும் எழுதியுள்ளார். புதிய ஏற்பாட்டை எழுதினவர்களில், கிரேக்கப் பெயரை உடையவர் நம்முடைய டாக்டர் தான் இவருக்கு இது இன்னுமொரு டாக்டர் பட்டம் போன்று.

அந்த காலகட்டத்தில் கிரேக்கர்கள் மனித உடல் பற்றியும், மருந்துகள் பற்றியும் அதிகம் அறிந்து வைத்திருந்தனர். ஆகவே, நம்முடைய டாக்டர் ஒரு கெட்டிக்கார டாக்டராகவே இருந்திருப்பார். இவர் ஒரு டாக்டர் என்பதற்கு, பவுல் சொன்னதோடு, வேறு ஆதாரங்களும் வேதாகமத்தில் உண்டு.

இவர் மற்ற சுவிசேஷ எழுத்தாளர்களை போலல்லாமல், இயேசு ஐயரின் 19 அற்புதங்களைத் தன்னுடைய நூலில் எழுதியுள்ளார். இவைகளில் பெரும்பாலானவை, நோயுள்ளவர்களையும், மரித்தோரை எழுப்புதல் பற்றியுமே பேசுகிறது. இவர் டாக்டராக இருக்கிறதினால் தானே இப்படி எழுதியுள்ளார்.

இந்த டாக்டர் லூக்கா விடமிருந்து நாம் என்னத்தை இம்மாதம் கற்றுக் கொள்கிறோம்?

நாம் படித்து பின்னாளில் டாக்டர் ஆனாலும், இன்ஜினியர் ஆனாலும், கலெக்டர் ஆனாலும், அந்த வேலையோடு சேர்த்து நாம் ஊழியம் செய்கிற பிள்ளைகளாகவும் இருக்க வேண்டும். டாக்டர் லூக்கா அப்படித்தானே இருந்துள்ளார். நாமும் அப்படி இருப்போமா?

சிறு பிள்ளைகளாகிய நம்மை பரலோகத்தின் தேவன் ஆசீர்வதிப்பாராக!

**R. Abel Rodger Nayagam**

# சபைவாசத்தின் அடிப்படைகள்

புதிய ஏற்பாட்டில் தேவன் விளக்கியிருக்கிற ஒன்றான சபையை எப்படி அடையாளம் கண்டு கொள்வது என்பதை நிர்ணயிப்பதற்காக நாம் பாடுபட்டு கொண்டிருக்கிறோம். தேவன் எப்போதுமே மனிதன் பின்பற்றும்படியாக ஒரு மாதிரியைக் கொடுத்திருக்கிறார் என்று நாம் பார்த்திருக்கிறோம். கடந்த மாதம் தேவன் நோவாவிடம் பேழையை உண்டு பண்ண சொன்னபோது கொடுத்த மாதிரியை நாம் விவரமாக ஆராய்ந்தோம். நோவா தேவன் கட்டளையிட்டபடியெல்லாம் செய்தார் என்றும் நாம் பார்த்தோம். நோவா தேவனுடைய மாதிரியை முழுவதுமாகப் பின்பற்றினார். அதன் விளைவு நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் ஜலப்பிரளயத்திலிருந்து இரட்சிக்கப்பட்டார்கள்.

அடுத்து தேவனுடைய மாதிரியை அப்படியேப் பின்பற்றின மோசேயைக் குறித்துப்பார்ப்போம். யாத்திராகமம் 25:8-9 வசனங்களில் நாம் வாசிக்கும்போது தேவன் மோசேயிடம் தான் வாசம் பண்ண ஒரு கூடாரத்தை உண்டு பண்ண வேண்டும் என்று கட்டளையிட்டார். இந்த வசனங்களின்படி தேவன் மோசேயிடம் என்னக் காட்டினார்? நம் தேவன் மோசேயிடம் அந்த கூடாரத்தின் மாதிரியையும், அதின் எல்லாத்தட்டுமுட்டுகளின் மாதிரியையும் காட்டினார். மேலும் தேவன் மோசேயிடம் அந்த மாதிரியின் படியே கூடாரத்தை உண்டு பண்ண வேண்டும் என்று கட்டளையிட்டார். யாத்திராகமம் 25:40ல் நாம் வாசிக்கும்போது தேவன் மோசேயிடம் மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு என்று சொன்னார். தேவன் மோசேயிடம் கொடுத்த மாதிரிப் பற்றி புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். (எபிரெயர் 8:5) (அப். 7:44).

யாத்திராகமம் 40:16ல் நாம் வாசிக்கும்போது கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் மோசே செய்தான் என்று நாம் வாசிக்கிறோம். மேலும் மோசே தனக்கு முன்பு வாழ்ந்த நோவா செய்தபடியே செய்தான் எனறு பார்க்கிறோம். தெளிவாக தேவனுடைய மாதிரியைப் பின்பற்றுவதில் எல்லா வழிகளிலும் ஜாக்கிரதையாக இருந்தான்.

உபாகமம் 12:32ல் நாம் வாசிக்கும்போதும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தாசனாகிய மோசே தேவன் தன்மூலமாக கொடுத்த கட்டளைகளை இஸ்ரவேல் மக்கள் மிக ஜாக்கிரதையாக கைகொள்ள வேண்டும் என்று எச்சரித்தார். தேவன் சொன்னதிலிருந்து ஒன்றையும் கூட்டவோ, குறைக்கவோ கூடாது என்று எச்சரித்தார். இன்றும் நாம் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால் புதிய ஏற்பாட்டில் தேவன்

கட்டளையிட்டிருக்கிறவைகளை கைகொள்வதில் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அதில் நாம் ஒன்றையும் கூட்டவோ குறைக்கவோ கூடாது. அந்த கூடாரத்தின் முக்கியத்துவம் என்ன? நாம் யாத் 25:8ல் பார்த்தபடி இஸ்ரவேல் மக்கள் மத்தியில் தேவன் வாசம் செய்கிறார் என்பதற்கு ஒரு அடையாளமாக இந்த கூடாரம் இருந்தது. அங்கே தான் அவர்கள் தேவனை ஆராதித்தார்கள்.

பழைய ஏற்பாட்டின் நாட்களில் தேவன் நோவாவுக்கும், மோசேக்கும் மாதிரியைக் கொடுத்திருந்தார். அந்த மாதிரிகள் நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் இரட்சிக்கப்படுவதற்கும், இஸ்ரவேல் மக்கள் மத்தியில் தேவன் வாசம் செய்வதற்கு ஒரு ஆதாரமாகவும் காணப்பட்டது. இரண்டு மிகப்பெரிய தலைவர்களும் தேவன் அவர்களுக்குக் கொடுத்த அந்த மாதிரியை மிக ஜாக்கிரதையாகப் பின்பற்றினார்கள்.

இந்த உண்மைகளிலிருந்து நாம் ஒரு முடிவுக்கு வருவது இயற்கையே. அந்த முடிவுரை என்ன? தேவன் இன்றும் நாம் தப்பித்துக் கொள்ள முடியாத ஒரு மாதிரியைத் தந்திருக்கிறார் என்பதே அந்த முடிவுரையாகும். நோவாவையும் மோசேயும் போல தேவன் நாமும் அவருடைய மாதிரியிலிருந்து ஒன்றையும் கூட்டவோ, குறைக்கவோ செய்யாமல் அப்படியே கீழ்படிய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். தேவன் இன்று நமக்கு தந்திருக்கிற மாதிரி என்ன? தேவன் இந்த கேள்விக்கான பதிலையையும் தந்திருக்கிறார்.

2தீமோ 1:13ல் நாம் வாசிக்கும்போது தேவன் நமக்குத் தந்திருக்கிற மாதிரியை நீங்களும் நானும் உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும் எனக் கட்டளையிடுகிறார். அந்த மாதிரி என்ன என்பதை தேவன் அடையாளம் காட்டுகிறார். அது என்ன? அந்த மாதிரி தேவன் முதல் நூற்றாண்டில் பவுல் இன்னும் மற்ற அப்போஸ்தலர்கள் மூலமாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாகவும் வெளிப்படுத்தின ஆரோக்கியமான வார்த்தைகளே ஆகும்.

எனவே, நீங்களும், நானும் உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டிய மாதிரி கிறிஸ்துவின் புதிய ஏற்பாடாகும். ஆகவே, நாம் புதிய ஏற்பாட்டு மாதிரியைப் பயன்படுத்தி ஒன்றான மெய்சபையை நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

புதிய ஏற்பாட்டு மாதிரியில் விளக்கப்பட்டிருக்கிற சபை விசேஷமானது இது கீழ்காணும் குணாதிசயங்களினால் வேறுபடுத்தப்படும். இந்த மாதிரியைத் தான் தேவன் நமக்குத் தந்திருக்கிறார். நாம் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமானால் நாம் மிக ஜாக்கிரதையாக அவற்றை கைகொள்ள வேண்டும் அதோடு ஒன்றயையும், கூட்டவும் கூடாது, குறைக்கவும் கூடாது.

அதைக்கட்டினவர், அதன் அஸ்திபாரம்; (மனித ஆரம்பம் அல்ல) மத்தேயு 16:18ல் நாம் வாசிக்கும்போது பிரியமானவர்களே இங்கே இயேசு வெளிப்படுத்தியிருக்கும் நித்திய முக்கியமான உண்மைகளைக் கவனியுங்கள், முதலாவது, நம்முடைய அருமை இரட்சகர் தன்னுடைய

சபையைக் கட்டுவதாக சொன்னார். எனவே, அவருடைய ஒன்றான மெய் சபையைக் கட்டினவர் இயேசுவே அதாவது எந்த மனுஷனும் அவருடை சபையை ஸ்தாபிக்கவில்லை.

இரண்டாவது, இயேசு என் சபையைக்கட்டுவேன் என்று ஒருமையில் சொன்னார். நம்முடைய மீட்பர் நூற்றுக்கணக்கான மார்க்க பிரிவினை சபைகளைக் கட்டவில்லை அப்படியென்றால் அந்த சபைகள் எல்லாம் எங்கேயிருந்து வந்தன? இந்த கேள்விக்கு நம் இரட்சகரே பதில் சொல்லட்டும்.

மத்தேயு 21:25,26 வசனங்களை நாம் வாசிக்கும்போது நம் கர்த்தர் தம்முடைய நாட்களில் வாழ்ந்த மதத்தலைவர்களைப் பார்த்து ஒரு வல்லமையான கேள்வியைக் கேட்டார். யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றே? மனுஷரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று? என்று கேட்டார். இன்னொரு வார்த்தையில் சொன்னால் இயேசு அவர்களிடம் யோவானின் ஞானஸ்நானம் எங்கேயிருந்து தோன்றினது என்று கேட்டார். அந்த ஞானஸ்நானத்திற்கு இரண்டு சாத்தியமானத் தோற்றங்களை இயேசு பட்டியலிடுவதைக் கவனியுங்கள். நம்முடைய மீட்பர் யோவானின் ஞானஸ்நானம் தேவனால் அங்கீகரிக்கப் படவில்லை அது மனுஷரிடமிருந்து வந்தது என்று தெளிவாக சொன்னார்.

நாமும் நம்முடைய இரட்சகரின் மாதிரியைப் பின்பற்றி இதே கேள்வியை மார்க்கபிரிவினையாரிடம் கேட்க வேண்டும். அதாவது, அந்த சபைகள் பரலோகத்திலிருந்து வந்ததா? அல்லது மனிதனிடமிருந்து வந்ததா? இயேசு ஒரே ஒரு சபையைக்கட்டினதாலும் அவர் பரலோகத்திலிருந்து வந்ததாலும், மற்ற எல்லா சபைகளும் மனுஷரிடமிருந்து வந்தவைகளே, மனிதர்கள் அவைகளைக் கட்டினபடியால் தேவன் அவைகளை அங்கீகரிப்பதில்லை. நாம் இதை இன்னும் தெளிவாக இயேசுவின் ஒன்றான மெய்சபையைப் பற்றி தேவனின் மாதிரியின் பல பாகங்களைப் பார்க்கும்போது பார்க்கலாம்.

எபேசியர் 1:22,23 வசனங்களை நாம் வாசிக்கும்போது எல்லா வற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்படுத்தி எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய, சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் என்று நாம் வாசிக்கிறோம். இங்கே ஒரு காரியத்தை மிக ஜாக்கிரதையாகக் கவனியுங்கள். அதாவது, இயேசு தம்முடைய சபைக்கு தலையாயிருக்கிறார் என்ற வாக்கியம் ஒருமையில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் பன்மையில் அதாவது, அநேக சபைகளுக்கு தலையாயில்லை.

கிறிஸ்துவுக்கும், அவருடைய உண்மையுள்ள விசுவாசிகளுக்கும் இடையில் உள்ள ஒற்றுமையை தெரிவிக்கும் இந்த விளக்கம் எவ்வளவு அழகாக இருக்கிறது பாருங்கள் இந்த கேள்வியைக் குறித்து நீங்கள் சற்று யோசித்துப்பாருங்கள். உங்களுக்கு எத்தனை சரீரங்கள் இருக்கிறது? நிச்சயமாக பதில் ஒரு சரீரம் என்று தான் வரும். அடுத்து உங்கள் சரீரத்தில் எத்தனைத் தலைகள் இருக்கிறது? தெளிவான பதில் ஒரு தலை என்பதுதான்.

இப்படிப்பட்ட கேள்விகளை நாம் ஏன் கேட்கிறோம். இன்று மத உலகில் நாம் காணும் இயற்கைக்கு புறம்பான சூழ்நிலையை அவர்களுக்கு சுட்டிக்காட்டுவதற்காக நாம் இந்த கேள்விகளை கேட்கிறோம். இன்று நாம் பல்வேறுபட்ட மத அமைப்புகள் பல்வேறுப்பட்ட மனிதர்களை தலைவர் களாக வைத்துள்ளதை பார்க்கிறோம். பிரியமானவர்களே இது இயற்கைக்கு புறம்பானது மாத்திரமல்ல இயேசுவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு எதிரானதுமாகும்.

1 கொரி 3:9-11ல் நாம் வாசிக்கும்போது ஒன்றான மெய்சபைக்கு அஸ்திபாரம் இயேசு கிறிஸ்துவே நம்மை சுற்றி இருக்கிற பல்வேறு மார்க்க பிரிவு ஸ்தாபகர்கள் அல்ல. ஆகவே, நாம் ஒன்றான மெய்சபையை அடையாளம் கண்டு கொள்வதற்கு தேவனுடைய மாதிரியின் முதல் பகுதியைப் பார்த்திருக்கிறோம். அந்தச்சபையைக் கட்டினவரும் அஸ்திபாரமும் இயேசு கிறிஸ்துவே, எந்த ஒரு மனுஷனும் அல்ல.

இப்போது நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் தேவனுடைய மாதிரியின் இந்த பாகத்தோடு இன்று நாம் மத உலகில் பார்ப்பதோடு ஒப்பிடவேண்டும். அதைச் செய்வதற்கு வரலாற்றின் சில உண்மைகளை நாம் அறிவிக்க வேண்டும். இந்த உண்மைகளை மிக சுலபமாக உறுதி செய்ய முடியும். நாங்கள் இந்த அறிக்கையை கர்வத்திலோ, சுயநீதி மனப் பான்மையிலோ அறிவிக்கவில்லை என்பதை நீங்கள் நிச்சயித்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக எங்கள் குறிக்கோள் சத்தியத்தை அன்புடன் பேசுவதாகும். நாம் வரலாற்றைப் படிக்கும்போது கீழ்காணும் மனிதர்கள் கீழ்காணும் சபைகளை தொடங்கினார்கள் என்பதை நாம் கற்றுக்கொள்ள முடியும்.

கத்தோலிக்க சபை - போனிபேஸ் III; லுத்தரன் - மார்ட்டின் லூதர்; எபிஸ்கோபாலியன் - ஹென்றி VIII; பிரஸ்பெடேரியன்-ஜான் கெல்வின்; பாப்திஸ்து, ஜான் ஸ்மித்; மெத்தடிஸ்ட்-ஜான் வெஸ்லி; யெகோவா சாட்சிகள் - சார்லஸ் டேய்ஸ் ரஸல்; மார்மோன் - ஜோஸப் ஸ்மித் பல்வேறு பெந்தெகொஸ்தே சபைகள் பல்வேறுப்பட்ட மனிதர்கள்; தென்னிந்திய திருச்சபை, சில மனிதர்களால்; வட இந்திய திருச்சபை - சில மனிதர்களால்.

நிச்சயமாகவே இந்த மனிதர்கள் எல்லாம் பல்வேறு வழிகளில் நல்லவர்கள் தான் ஆயினும் இவர்கள் இயேசு கிறிஸ்து அல்ல. இந்த சபைகள் எல்லாம் தவறான ஸ்தாபகர்களையும் அஸ்திபாரத்தையும் கொண்டுள்ளது. எனவே தேவனுடைய மாதிரிக்கு பொருந்தக்கூடியதாக இல்லை. இவைகள் வானத்திலிருந்து தோன்றினதல்ல, மனிதர்களிடமிருந்து தோன்றியதுதான் அதன் விளைவாக இவைகள் தேவனால் அங்கீகரிக்கப்படுவதில்லை. கர்த்தருக்குச் சித்தமானால் சபைக்காக தேவனுடைய மாதிரியின் பாகங்களை அடுத்த மாதம் தொடர்ந்து படிப்போம்.

**சார்லி டீ பால்மா** **CHARLIE DIPALMA**

# கிறிஸ்து தரும் சமாதானம்

திருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் ஒவ்வொருவரையும் மாசில்லாத வாழ்வு வாழ்ந்து, மரணத்தை ஜெயித்து, நமக்கு நித்திய ஜீவனை வைத்துப்போன தேவகுமாரன் இயேசு கிறிஸ்துவின் இன்ப நாமத்திலே வாழ்த்துகிறோம். சுகமாயிருப்பீர்களாக.

நாம் பார்க்கும் இந்த உலகில் பணத்தினாலும், மனித முயற்சியினாலும் முடியாத காரியங்கள் அநேகமுண்டு அவைகளில் சமாதானமும் ஒன்று. அதைத்தேடித்தான் அல்லும் பகலும் அலைமோதிக் கொண்டிருக்கிறோம்.

யோவான் 14:27ல் கிறிஸ்து தன்னுடைய சமாதானத்தைத் தருகிறேன் என்கிறார். ஆனால், அது உலகத்தில் கிடைக்காது என்கிறார். நாம் உலகத்தில் தானே இருக்கிறோம்? அப்படியானால் உலகம் தராத சமாதானம் எது? ஒரு நிமிடம் கண்களை மூடி ஜெபித்து பிதாவே! மெய்யான சமாதானம் எது என நாங்கள் புரிந்து கொள்ள உதவுங்கள் கிறிஸ்துவின் நாமத்தில் பிதாவே என ஜெபித்து கடந்து செல்லுங்கள்.

**1. நம் நாட்களில் கிறிஸ்து எப்படி காட்டப்படுகிறார்?**

நமது நாட்களில் நீதி 23:23 சத்தியத்தை வாங்கு அதை விற்காதே என்ற சாலமோனின் எச்சரிப்பு அநேகரின் காதுகளில் எட்டுவதில்லை. (1) பிசாசுகளைத் துரத்தும் மந்திரவாதியாகவும் (2) கடன்களைத் தீர்த்து வைக்கும் நிதிமந்திரியாகவும் (3) திருமணங்களை நடத்தி வைப்பவராகவும் (4) வியாதிகளைத் தீர்த்து வைப்பவராகவுமே வெளிப்படுத்தப்பட்டதால் ஆண்டவரின் தெய்வீக மேன்மை இருட்டடிப்பு செய்யப்பட்டதால் நம்மால் மெய்யான சமாதானம் எது என கண்டுபிடிக்க முடியவில்லை. வேதாகமமே இதற்கு விடை கொடுக்கட்டும் உங்கள் வேதத்தின் பக்கங்களை திருப்பி அப்போஸ்தலர் நடபடிகள் 16:12-15 வரை வாசியுங்கள்.

**A. இரத்தாம் பரம் விற்ற லீதியாள் :**

இரத்தாம் பரம் என்பது விலையுயர்ந்த வஸ்திரம் அதிகமான வேலைப்பாடுகளும் மிகுந்த பொருள் செலவிலும் உண்டாக்கப்பட்டு செல்வந்தர்கள் மட்டுமே உடுத்தும் உடை அது. லூக்கா. 16:19ல் ஐசுவரியவான் இரத்தாம்பரம் உடுத்தினான் என்று பார்க்கிறோம்.

அப்படியானால், இரத்தாம்பரம் விற்ற அந்த ஸ்திரி கந்தல் உடையை உடுத்தியிருக்கமாட்டாள். அனுதின உணவிற்கு கஷ்டப்படுகிறவளல்ல. அப். 16:15 அப்போஸ்தலரை தன் வீட்டில் தங்கும்படி வருந்திக் கேட்டுக் கொண்டாள் என்றால். நல்ல சவுகர்யமான வீட்டிலே வசித்திருக்க வேண்டும்

பிறகு ஏன்? லீதியாளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றனர். இன்றைக்கு நாமெல்லாம் நல்ல வீடு, நிரந்தரமான வேலை, ஓய்வு பெறும் வயதில் ஒரு குறிப்பிட்ட வங்கியிருப்பு பிள்ளைகளுக்கு சரீரப்பிரகாரமான சுகமான வாழ்வு இதைத் தானே **சமாதானம்** என்று நினைத்து மயங்கிக் கொண்டு இருக்கிறோம். (பிலி. 3:18, ரோமர் 6:18) மத வியாபாரிகளும் இந்த மாய வலையை எல்லா இடங்களிலும் விரித்து வைத்திருக்கின்றனரே! எனக்கன்பானவர்களே இன்னும் கூட ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்.

**1. எத்தியோப்பியாவின் நிதி மந்திரி**

அப்போஸ்தல.... 8:26-40 வசனங்களை வாசித்துப்பாருங்கள். கந்தாகே என்கிற இராஜஸ்திரியின் பொக்கிஷதாரி, எத்தியோப்பியா விலிருந்து வந்து எருசலேமில் தேவனைத் தொழுது கொண்டு தன் ரதத்தில் திரும்பிப் போகும்போது ஏசாயா புத்தகத்தை (53 வது அதிகாரம்) அர்த்தம் புரியாமலே வாசித்துக் கொண்டு செல்கிறான் (1கொரி 1:19-20) உலக ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியம் என்பது எத்தனை உண்மை பாருங்கள்.

சத்தியம் புரியாமலே ஒரு ஆண்டில் பலமுறை முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்கிற அன்பான நண்பர்களை நான் பார்த்திருக்கிறேன்.

சரி, நாமாவது விளக்கிச் சொல்லலாம் என்றால் என்னை விட நீ எப்படி அறிவில் சிறந்தவன்? என்கிறார்கள். அவர்களெல்லாம் எத்தியோப்பிய மந்திரியின் தாழ்மையைக் கற்றுக் கொள்ள வேண்டும் (அப். 8:31) ஒருவன் எனக்கு அறிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்றான். முடிவிலே ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். நம்முடைய கேள்வி இதுதான், ஒரு நாட்டின் நிதிமந்திரிக்கு என்ன சரீரப் பிரகாரமான குறைவு இருக்க முடியும்?

பணமும், பதவியும், அதிகாரமும் ஆள்பலமும் தராத சமாதானம் சத்தியத்தில் இருந்ததால் தானே ஞானஸ்நானம் பெற்றான். பிரியமானவர்களே உலகம் மந்திரிக்கு சமாதானத்தைத் தந்ததா? இக்கட்டுரையை வாசிக்கும் நீங்கள் எதனை சமாதானம் என்று நினைக்கிறீர்கள். வாருங்கள் இராணுவ தளபதி ஒருவரைப் பார்ப்போம்.

**3. பட்டாளத்தின் அதிபதி கொர்நேலியு - அப். 10:1-6...**

கொர்நேலியு என்னும் பேர் கொண்ட இந்த மனுஷன் தேவ பயத்தோடே தன் குடும்பத்தையும், தன் அலுவல்களையும் நடப்பிப்பவன். யூதனாக இல்லாதபோதும் அடிக்கடி ஜெபிக்கின்ற பழக்கமுடையவன். ஜனங்களுக்கு மிகுந்த தான தர்மங்களைச் செய்கின்ற உத்தமமான மனுஷன். இன்றைய அதிகாரிகள் தேவனுக்கு பயப்படுகின்றவர்களாய் இருந்தால் எவ்வளவு அருமையாய் இருக்கும் (அப். 10:3-5) கொர்நேலியு ஜெபித்துக்

கொண்டிருந்த வேளையில் தேவதூதன் தோன்றி. கொர்நேலியுவே நீயும் உன்குடும்பமும் இரட்சிக்கப்பட இப்பொழுது செய்து கொண்டிருக்கும் கிரியைகளையே தொடர்ந்து செய் அதுபோதும் என்றாரா? இல்லை பிரியமானவர்களே! தேவன் கொர்நேலியுவின் சிறந்த பண்புகளுக்கு வெகுமதியளிக்க விரும்பினார். (அப். 10:35) நீதியைச் செய்கிறவர்கள் மேல் பிரியப்படுகிற தேவனவர்.

ஆகவே தான், பேதுருவை அழைக்க வேண்டியதாய் இருந்தது, சத்தியத்தைக் கேட்டு ஞானஸ்நானம் பெற்று (எபேசியர் 1:23) (அப் 2:47) சபையிலே சேர வேண்டியதாய் இருந்தது.

பிரியமானவர்களே கொர்நேலியு விஷயத்திலும் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டிய காரியம். நல்ல பதவி, மனைவி பிள்ளைகள் திரளான செல்வம் இவைகள் இருந்தும் கொர்நேலியு மேலான திருப்தி, சமாதானம் தரும் காரியத்தில் ஈடுபட்டார். பரிசுத்த வேதம் 2கொரி 4:18 கண்களால் காணும் யாவும் அநித்தியமானது என்கிறது. 2பேதுரு 3:10-12 உலகிலுள்ள கிரியைகளெல்லாம் அழிந்து போகும் ஒரு நாள் உண்டு. கிறிஸ்து மத்தியவானில் தோன்றும் நாள் வெகு அருகில் இருக்கிறது.

எது மெய் சமாதானம் : யோவான் 8:29 நமதாண்டவரை யூதர்களில் அநேகர், வேதபாரகர், பரிசேயர், நியாயசாஸ்திரிகள் எவ்வளவோ நிந்தை அவமானங்களைக் கொண்டுவந்தாலும் ஆண்டவரால் எப்படி எல்லாவற்றையும் (யோவா 16:33) ஜெயங் கொள்ள முடிந்தது என்றால்? பரலோகத்தின் தேவன் எப்போதும் அவரோடு கூட இருந்தார்.

பரலோகத்தின் தேவன் என்னுடனே இருக்கின்றார் என்பதை விட மேன்மையான சமாதானம் வேறு என்ன இருக்க முடியும் பிரியமானவர்களே, அந்த ஆண்டவரும், கிறிஸ்துவும் உங்களுக்குள் வந்து உலகம் தராத சமாதானத்தை தர ஆயத்தமாய் உள்ளனர்.

நீங்கள் அதைப் பெற்றுக்கொள்ள தயார் என்றால் (1) யோவான் 8:32, 17:17) சத்தியத்தை (1கொரி 15:1-4) அதாவது சுவிசேஷத்தைக் கேள்விப்படுங்கள் (அப். 8:37) (2) கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசியுங்கள் (3) அநித்தியமான பாவங்களை விட்டு தவறான நம்பிக்கைகளை விட்டு மனந்திரும்புங்கள் (மாற் 16:16) (4) மனுஷருக்கு முன்பாகவும், தேவனுக்கு முன்பாகவும் (ரோம 10:9-10) அறிக்கை யிடுங்கள். (5) பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு (மத். 28:19-20) மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாய் இருங்கள் (வெளி. 2:10)

அப். 20:28 கிறிஸ்து தன் இரத்தத்தினாலே சம்பாதித்த அவரது சபையிலே அதாவது, கிறிஸ்துவின் சபையில் கிறிஸ்தவராக வாழ்ந்தால், கிறிஸ்துவும், தேவனும் தரும் நித்திய வாழ்வு என்ற மேலான சமாதானத்தைப் பெறுவீர்கள். தேவசமாதானம் உங்களை ஆண்டு கொள்ளட்டும்.

அன்புடன்,

***S. Pitchaimuthu***

# வேதாகமம் மட்டும் போதுமா?

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள நல்ல பல காரியங்களை நாம் அவசியம் படிக்க வேண்டும். ஆனால், நமது வாழ்வு பற்றி கர்த்தருடைய கட்டளைகளைப் புரிந்து கொள்ள வேறு சில சட்ட நூல்களும் உதவிகளும் நமக்குத் தேவையில்லையா? இப்படி ஒரு' கேள்வியை இன்று பலர் கேட்கிறார்கள்.

இக்கேள்விக்குச் சரியான விடை காண அதே வேதாகமத்தைத் தான் நாம் நாட வேண்டும். கர்த்தருடைய சுவிசேஷத்தில் (வேதாகமம்) காணப்படாத வேறு சில காரியங்களையும் நாம் செய்ய வேண்டுமென தேவன் விரும்புகிறாரா என்பதை அறிய அவருடைய வசனங்கள் என்ன கூறுகின்றன என்பதைப் பார்ப்போமா?

"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என்பதாக IIதீமோத்தேயு 3:16,17 வசனங்களில் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. வேதாகமம் நமக்கு எல்லா நற்கிரியைகளையும் கொடுப்பதாக இருப்பின், அதில் கூறப்படாத எந்தக் காரியத்தைச் செய்து தேவனை பிரியப்படுத்த வேண்டும் என அவர் விரும்புகிறார்?

"சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம்" என யாக்கோபு 1:25ல் கூறப்பட்டுள்ளது. "பூரணம்" என்ற வார்த்தைக்கு "எதுவும் விட்டுப் போகாத முழுமையான" என பொருள். எதுவும் விட்டுப் போகாத தேவனுடைய விருப்பத்தை அறிய வேறு எந்த புதிய செய்தியை நாடி நாம் அலைய வேண்டும்?

"தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டியவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது" என்பதாக பேதுரு கிறிஸ்தவர்களுக்கு எழுதியுள்ளார். (2 பேதுரு 1:3). ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் ஏற்கனவே தேவன் நமக்குத் தந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. வேறு சட்ட நூல்கள் தமக்குத் தேவையா? அல்லது வேறு எந்த உதவியை எதிர்பார்க்க வேண்டும்?

கர்த்தருடைய வசனம் சத்தியமானது, (யோவான் 17 :17), வசனத்தைப் பூரணமாக தந்துள்ளதாக அவர் கூறியிருக்கிறார். அவர் கூறுவதில் நாம் நிலைத்திருப்போம்.

***ஜெர்ரி பார்பர்***

# உங்களுடைய பக்தியை சோதித்தறியுங்கள்

பரிசுத்த வேதாகமத்திலுள்ள புத்தகங்களில் ஒரு சிறிய புத்தகமாக யாக்கோபு எழுதின நிருபம் இந்தாலும், இது நமக்குப் பயன்தரும் பல சிறப்பான செய்திகளை தனக்குள்ளாக அடக்கியுள்ளது. கிறிஸ்தவம் ஒரு **அன்றாட மார்க்கம்** என்பதை இந்நூல் வலியுறுத்திக் கூறுகிறது. அநேக சமயங்களில் நாம் நம்முடைய மார்க்கத்தைக் குறித்து பெருமை பாராட்டுகிறோம். ஆனால், நம்முடைய வாழ்வில் அதை நடைமுறை படுத்துகிறோமா? நாம், நமது மார்க்க நீதிகளை நடைமுறைப்படுத்தா விட்டால், நம்முடைய மார்க்கம் வீணான மார்க்கம் என்று யாக்கோபு கூறுகிறார்.

யாக்கோபு 1:26 இப்படிச் சொல்கிறது. "உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவ பக்தியுள்ளவன் என்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும்" ஒரு கிறிஸ்தவனாயிருந்து நாம் மற்றவர்களிடம் பேசும் போது, நம்முடைய மார்க்கம் எதை வெளிப்படுத்துகிறது? ஜனங்களுடனான நம்முடைய அன்றாட பழக்க வழக்கங்கள் எதை பிரதிபலிக்கிறது?

நம்முடைய மார்க்கம் இயேசுக் கிறிஸ்துவினுடைய வாழ்க்கை மற்றும் அவருடைய கிரியைகளை அடிப்படையாகக் கொண்டது. அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறபடியால் ஒவ்வொரு நாளும் அவரைப் பின்பற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம். (யோவா. 14:6) இயேசுக் கிறிஸ்துவைப் பின்பற்றுவது தான் கிறிஸ்தவமாகும். கிறிஸ்து நம்முடைய அன்றாட வாழ்வில் காணப்படுவாராக!.

யாக்கோபு மூன்றாம் அதிகாரத்தில் நாவைக் குறித்து ஆசிரியர் பேசுகிறார். சரீரத்தில் நாவு சிறிய அவயவமாயிருந்தும், அநேக சமயங்களில் அதை அடக்குவது மிகுந்த சிரமம் என்று கூறுகிறார். பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும் படிக்கு அவைகளில் வாய்களில் கடிவாளம் போட்டு, அவைகளுடைய முழுச் சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம். கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும் கடுங்காற்றுகளால் அடிபட்டாலும் அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும். அப்படியே, நாவானதும் சிறிய

அவயவமாயிருந்தும், பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டை கொளுத்தி விடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது. சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷ சுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. நாவை அடக்க ஒரு மனிதனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்தது மாயிருக்கிறது. (யாக். 3:3-8). எவ்வளவு நேர்த்தியாக யாக்கோபு ஆசிரியர் நாவின் இயல்பைக் விவரித்திருக்கிறார் பாருங்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய அன்றாட வாழ்வில் நாவுகளை உபயோகிக்கும் போது மிகுந்த ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நாம் மற்றவர்களோடு பேசும்போது, நாம் யார் என்பதை அது வெளிப்படுத்தும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய நாவு விஷயத்தில் எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்" பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜன முண்டாகும்படி பேசுங்கள் (எபே. 4:29) என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது.

நம்முடைய கர்த்தர் ஒருபோதும் தன்னுடைய நாவை வீணாக உபயோகித் ததில்லை. ஏனெனில், "அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை" என்று அவரைப் பற்றி எழுதியுள்ளது.(1பேது. 2:22). மேலும், பேதுரு இவ்விதம் கூறுகிறார், "ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக் காத்து...." (1பேது 3:10) இன்னும் அப்போஸ்தலன் பவுல் பிலிப்பியரில், "..., கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள்" என்கிறார் (பிலி. 1:27).


அடுத்து முக்கியமாக நாம் பார்க்க வேண்டுவது யாதெனில், மற்றவர் களுடனான நம்முடைய காரியத்தில் நாம் எப்பொழுதும் மிகுந்த கவனமாக இருக்க வேண்டுமென்பது. தன்னால் ஆனமட்டும், நன்முறையில் நடந்து கொள்ள வேண்டும். தேவனுடைய பிள்ளைகளாயிருந்து நற்கிரியைகளைச்

செய்யும்படியாய் நாம் படைக்கப்பட்டிருக்கிறோம். எபேசியர் 2:10ல் பவுல் இவ்விதம் கூறுகிறார். "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள், சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கை யாயிருக்கிறோம்....." நாம் மற்றவர்களோடு பழகும்போது, நம்முடைய ஆளுமை எதைப் பிரதி பலிக்கிறது? நாம் மோசமான , அசிங்கமான மனோபாவம் உள்ளவர்கள் என்று பிரதிபலிக்குமா? இல்லை, நாம் உண்மையாகவே கிறிஸ்துவின் சிந்தையுள்ளவர்களாயிருந்தால், நாம் யாரை விசுவாசிக்கிறோமோ அல்லது நாம் யாருக்குச் சொந்தமோ அவருடைய தன்மையை அது பிரதிபலிக்கும். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலுமிருக்கக் கடவது" (பிலி. 2:5) நமக்கு உண்மையாகவே கிறிஸ்துவின் சிந்தை இருக்கிறதா?

கிறிஸ்தவர்கள் முற்றிலும் வித்தியாசமானவர்கள் (1பேது. 2, தீத்.2:12 14) அவர்கள் வேறுபட்டவர்கள் (2கொரி 6:17) அவர்கள் உலகத்துக்கு வெளிச்சமும், பூமிக்கு உப்புமானவர்கள். இயேசுக்கிறிஸ்து இதை மலைப் பிரசங்கத்தில் சொல்லி யுள்ளார். மலையின் மேலிருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. (ஆம், உங்கள் நற்கிரியைகளும், மனுஷரால் பார்க்கப்படும், மறைந்திருக்கமாட்டாது).... தொடர்ந்து, இயேசு, "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்தி லிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது" (மத். 5:13-14).

இயேசுக் கிறிஸ்து நம்முடைய கர்த்தர் பூமியிலே வாழ்ந்த எல்லோரிலும் மேலானவராயிருந்து, மிகச் சிந்த முன்மாதிரியை வைத்துள்ளார். அவருடைய வாழ்க்கை நற்கிரியைகளால் நிறைந் திருக்கிறது. ஜனங்களுடனான அவருடைய பழக்கமும், செயல்பாடும் போற்றுதற்குரியது. எப்பொழுதும் சிறந்ததையே செய்தார். அவருடைய சித்தத்தின் வழியில் நாம் நடப்போமாக! நாம் அப்படிச் செய்வோமானால், கிறிஸ்தவத்தை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்க எப்பிரச்சனையும் இராது. நாம் அவருடைய மாதிரியைப் பின்பற்றும்படி, நமக்காகப் பாடுகள் பட்டு, நமக்கு மாதிரியைப் பின் வைறத்துப் போயுள்ளார்.


**FRANCIES DAVID** **EZSR**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## TV PROGRAM




Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postal Registration No. Erode / 26 / 2006 - 2008

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் **திருமறை தியானம்**
நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.




தமிழன் TV சனி காலை 7:15 - 7:30
தமிழன் TV ஞாயிறு இரவு 9:45 - 10:00
SS மியூசிக் TV திங்கள் காலை 7:00 - 7:15

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்
கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவச பயிற்சி.**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள
வேண்டிய முகவரி
இயக்குனர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா.

Printed by : K.C Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam. Ph : 04257 - 222555, 224555